மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தேனியில் ஒரு விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு தேனி அல்லி நகரம் நகராட்சியின் ஆய்வில் உள்ளது. அச்செயற்குறிப்பு அரசுக்கு இன்னும் வரவில்லை.

(ஆ) விளையாட்டு மைதானம் அமைப்பதற்குத் தேவையான நிலங்களைப் பெற காட்டு இலாகாவினரிடமும் மற்றும் சிட்கோ நிறுவனத்தாரிடமும் நகராட்சி ஆணையரால் தொடர்பு கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அய்யலூர்-ஆலம்பாடி சாலை அமைக்கும் பணி.

202—(*வினா எண். 19863)—திரு. வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வேடசந்தூர் தாலுகாவில் அய்யலூர்-ஆலம்பாடி சாலை அமைக்க 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 28 இலட்சம் அரசு ஒதுக்கியும் இன்னும் வேலை ஆரம்பிக்கப் படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இச்சாலைப்பணி 1982-83 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்ட வேலைகளின் கீழ் இதர சாலைப் பிரிவில் மேற்கொள்ள ரூ. 20 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்குத் தலைமைப் பொறியாளர் தொழில் நுட்ப அனுமதி வழங்கியுள்ளார். சாலைப் பகுதி 6 கிலோமீட்டரிலிருந்து 8 கிலோ மீட்டர் வரையில் மண்வேலை முடிவடைந்து உள்ளது. சாலைப் பகுதி 8 கி.மீ.-லிருந்து 12 கி.மீ. வரையில் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. சிறு பாலப்பணிகளாக அந்தப் பணியில் 25 குழாய்ப் பாலப் பணிகள் உள்ளடங்கியுள்ளன. 11 பணிகளில் ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. மற்றும் 11 பணிகளில் ஒப்பந்தங்கள் பரிசீலனையில் உள்ளன. மீதமுள்ள 3 பணிகளில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மண் ரோடு போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த ரோடில் கூட சமீபத்தில் பெய்த மழை காரணமாக மண் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறதே, அது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்துள்ளதா ? மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நேஷனல் ஹைவேஸ், ஹைவேஸ் சாலைகள், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்

1984 மார்ச் 7]

பட்ட ரோடுகள் எல்லாம் சமீபத்தில் ஏற்பட்ட மழை காரணமாக மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. ஆகவே பணம் ஒதுக்கி அந்தப் பழுதடைந்துள்ள சாலைகளைச் செப்பனிட அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தின் காரணமாக ஏற்பட்ட பல்வேறு விளைவுகளால் சாலைகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. தற் சமயம் பராமரிப்புப் பணிகள் வேகமாக முடுக்கி விடப்பட்டிருக் கின்றன. எந்தெந்தப் பகுதிகளில் சாலைகள் மோசமாக இருக் கின்றனவோ அவைகள் எல்லாம் சீர்செய்யப்படும்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, வேடசந்தூர் தாலுகாவில் உள்ள அய்யலூர்-ஆலம்பாடி சாலைக்காக 28 இலட் சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தும் அதற்கான வேலைகளை சமீபத்தில் தான் சிறிது ஆரம்பித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல் கிறார்கள். அதேபோல் என் தொகுதியில் ஆயக்குடி-மருங்கா பட்டினம் சாலைக்குச் சென்ற ஆண்டு 25 இலட்சம் ரூபாய் ஒதுக் கியும் இன்றுவரை வேலை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. வருடக்கணக்காக வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதால் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் உரை யாற்றுவதற்கு இடமில்லை.

1982–ஆம் ஆண்டு இறுதிவரை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோர் எண்ணிக்கை.

203—(*வினா எண். 17571)—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்பு மிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1782-ம் ஆண்டு இறுதிவரை தமிழகத்தில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள ஆண்கள் எத்தனை? பெண்கள் எத்தனை ?

(ஆ) வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலை கிடைக்காமல் வயது வரம்பைக் கடந்தவர்களுக்கு அரசு காட்டும் சலுகை என்ன ?